**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி /நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை : செல்வி. G.பவித்ரா, L.L.M.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்கரன்கோவில்.**

**நீதித்துறை நடுவர், சங்கரன்கோவில் (மு.கூ.பொ)**

**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 06-ம் தேதி வெள்ளிக்கிழமை**

**Cr.M.P.No. 299/2026**

சின்னக்கோவிலான்குளம் காவல் நிலைய குற்ற எண். 27/2026

மனு நாள் 02.03.2026 பிரிவு 497 பி.என்.எஸ்.எஸ்.

செல்லத்துரை,

த/பெ. ராமையா

.....மனுதாரர் / வாகன உரிமையாளர்

/எதிர்/

காவல்துறை உதவி ஆய்வாளர்,
சின்னக்கோவிலான்குளம் காவல் நிலையம்

..... எதிர்மனுதாரர்

மனு மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. அரசு தரப்பில் பதில் பெறப்பட்டது.

மனுதாரர் தரப்பில், மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட வாகன எண். TN 76 U 6537 என்ற எண் கொண்ட Hero Honda Splendor Plus இருசக்கர வாகனத்தை எதிர்மனுதாரர் காவல் நிலையத்தினரால் குற்ற எண். 27/2026 பிரிவுகள் 331(3), 331(4), 305(a) BNS வழக்கு பதிவு செய்யப்பட்டு சமூக நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றும், மேற்படி வாகனம் சமூக நீதிமன்றத்தில் ரிமாண்ட் செய்யப்பட்டு, எதிர்மனுதாரர் காவல் நிலைய பாதுகாப்பில் உள்ளது என்றும், மேற்படி வாகனம் தொடர்ந்து காவல் நிலையத்தில் இருக்கும்பட்சத்தில் அவரது வாகனம் வெயிலிலும், மழையிலும் நனைந்து துருப்பிடித்து பயன்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும் என்றும், மேற்படி வாகனம் அத்தியாவசியமாக தேவைப்படுவதாகவும், மேற்படி வாகனத்தை தன்னிடம் ஒப்படைக்காதபட்சத்தில் பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும் என்பதாலும், மேற்படி வாகனத்தை நீதிமன்ற பிணையில் பெற்று சென்ற பின்பு அதை உருமாற்றம் செய்யவோ, விற்பனை செய்யவோ மாட்டேன் என்றும், சமூக நீதிமன்றம் உத்தரவிற்கு கட்டுப்பட்டு நடப்பதாகவும், மேலும், மனுதாரர் தரப்பில் கூடுதல் அபிடவிட் தாக்கல் செய்யப்பட்டு, அதில் மனுதாரரின் மகன் மகேந்திரன் மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட மேற்படி வாகனத்தை எடுத்துச சென்றதாக தெரிவித்துள்ளதாகவும், எனவே, மேற்படி வாகனத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்க வேண்டுமென்றும், ஒப்படைவு செய்ய வேண்டி வாதிடப்பட்டது.

எதிர்மனுதாரர்/அரசு தரப்பில், சின்னக்கோவிலான்குளம் காவல் நிலைய குற்ற எண். 27/2026 வழக்கில் கண்ட சொத்தான TN 76 U 6537 என்ற எண் கொண்ட Hero Honda Splendor Plus இருசக்கர வாகனத்தை இந்நீதிமன்றத்தில் பி.ஆர்.எண். 119/2026

பிரகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி வழக்கானது விசாரணையில் இருப்பதால் எதிரி/வாகன உரிமையாளரிடம் வாகன ஆவணங்களை சரிபார்த்து இடைக்காலமாக கொடுத்தால் வழக்கின் விசாரணைக்கு தொடர்ந்து ஒத்துழைக்கமாட்டார் என்பதாலும், வாகனத்தை விற்கவோ அல்லது உருமாற்றவோ அல்லது தொடர்ந்து தலைமறைவாகவோ செய்துவிடுவார் என்பதாலும் வாகன ஆவணங்களை சரிபார்த்து அதன் உரிமையாளரிடம் இடைக்காலமாக கொடுக்க கடுமையான ஆட்சேபனை செய்வதாக எடுத்துரைக்கப்பட்டது.

மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. பி.ஆர்.எண்.119/2026-ல் கண்ட சொத்தான. TN 76 U 6537 என்ற எண் கொண்ட Hero Honda Splendor Plus இருசக்கர வாகனம் மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்பதை எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபிக்கவில்லை என்பதைக் கருத்தில் கொண்டும், அதற்கான ஆவணங்களை மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்திருப்பதாலும், மேற்படி வாகனம் நீதிமன்ற காவலில் இயக்கப்படாமல் இருந்தால் பழுதாகிவிடும் என்று மனுதாரர் வாதம் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் இருப்பதாலும், மேற்படி மனுதாரர் தரப்பில் இவ்வழக்கின் 2-வது எதிரி தனது மகன் என்று தெரிவித்து கூடுதல் அபிடவிட் தாக்கல் செய்துள்ளதைக் கருத்தில் கொண்டும், மேற்படி வாகனத்தை கீழ்க்கண்ட நிபந்தனையின் பேரில் மனுதாரரிடம் இடைக்காலமாக ஒப்படைக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

<u>நிபந்தனைகள் :</u>

1. மனுதாரர் தானும், தனக்காக இரு நபர்களும் தலா ரூ.70,000/-க்கு பிணைமுறி எழுதிக் கொடுக்க வேண்டும்.
2. வாகனத்தின் அசல் ஆர்.சி.புத்தகத்தை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டும்.
3. வாகனத்தை விற்கவோ, உருமாற்றம் செய்யவோ கூடாது.
4. நீதிமன்றம் உத்தரவிடும் நாளிலும், விசாரணையின்போதும் வாகனத்தை தவறாது நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும்.
5. வாகனத்தின் நான்கு புறங்களையும் புகைப்படம் எடுத்து புகைப்படத்தையும் அதற்கான சி.டியையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.
6. பஞ்சநாமா தயாரித்து வழக்கு கோப்புடன் இணைத்து வைக்க வேண்டும்.

ஷை நிபந்தனைகளின் கீழ் பி.ஆர்.எண் 119/2026 ல் கண்ட TN 76 U 6537 என்ற எண் கொண்ட Hero Honda Splendor Plus இருசக்கர வாகனத்தை மனுதாரர் வசம் இடைக்காலமாக ஒப்படைவு செய்து உத்தரவிடப்படுகிறது.

PAVITHRA G
Digitally signed by PAVITHRA G
Date: 2026.03.06 16:38:35 +0530

நீதித்துறை நடுவர், (மு.கூ.பொ),

சங்கரன்கோவில்.